**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.**

**2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள்**

**C.CNO. 151/2014**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் (கூ.மு.பொ) திரு. கி.சக்திவேல், பி.காம். பி.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆரோக்கியராஜ்<br>துணை கண்காணிப்பாளர் | வயது | : | |
| த.பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | மதம் | : | |
| காவல் நிலையம் | : | | நிலை | : | P.W.28 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 24.03.2023**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** – நான் தற்பொழுது விருத்தாசலம் உட்கோட்டத்தில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகின்றேன். 2013 ம் வருடம் பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த பொழுது 15.11.2013 ம் தேதி இவ்வழக்கின் வாதி வசந்தஜோதி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துபூர்வமாக கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலையக்குற்ற எண் 306–2013 சட்டப்பிரிவுகள் 465, 466, 471, 420 IPC படியாக 20.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.86 ஆகும்.** இரவு நேரம் ஆகிவிட்டதால் மறுநாள் 16.11.2013 ம் தேதி காலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலு, கமலநாதன் ஆகியோர்கள் முன்பு சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **அவை முறையே அ.சா.ஆ.87 மற்றும் அ.சா.ஆ.88 ஆகும்.** சாட்சிகள் வசந்தஜோதி, கனகசபை, ஸ்ரீபன், மோகன், பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) பின்னர் 18.11.2013 ம் தேதி சாட்சிகள் வட்டாட்சியர் விஜயா, வருவாய் ஆய்வாளர் செந்தில் வேல், கிராம நிர்வாக அலுவலர் செந்தில் நாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் தேர்தல் சம்பந்தமாக பணிமாறுதல் ஆகி வேறு மாவட்டம் சென்ற பிறகு எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களின் உத்திரவின் அடிப்படையில் உயர்நீதிமன்ற உத்திரவு Crl.O.P. NO. 137/2014 அடிப்படையில் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்ற பிரிவு அவர்களுக்கு 28.01.2014 ம் தேதி கோப்புகளை அனுப்பி வைத்தார்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** புகார் கொடுத்ததின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றால் சரிதான். சாட்சிகளை விசாரித்த பிறகு உயர்நீதிமன்ற உத்திரவின் அடிப்படையில் தான் மாவட்ட குற்ற பிரிவு, கடலூருக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் யார் மனு கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் ஏ.டி.எஸ். ராஜா என்பவர் தான் மனு கொடுத்துள்ளார். அவர் இந்த வழக்கில் எதிரி என்றால் சரிதான். புகார்தாரர் வசந்தஜோதி, கமலநாதன், கனகசபை ஆகியோர்கள் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் பெட்ரோல் பங்க் மூட உத்திரவு வந்து எத்தனை நாட்களுக்கு பிறகு அது போலியான உத்திரவு என்று தெரியவந்தது என்றால் எப்பொழுது போலியானது என்ற தெரியவந்தது என்று எனக்கு ஞாபகமில்லை, ஆனால் போலியானது என்ற தெரிந்த பிறகு தான் புகார் கொடுத்தார்கள். பார்வை மகசர், மாதிரிவரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்திலேயே தயார் செய்தேன் என்றாலும், சாட்சிகளையும் காவல் நிலையத்தில் தான் விசாரித்தேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புகார்தாரர் பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் என்றாலும் நான் அதனை வைத்து பெய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றாலும் சரியல்ல.

**3, 4 , 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** வசந்தஜோதி புகார் கொடுப்பதற்கு முன்பு இது சம்பந்தமாக எதாவது புகார் கொடுத்துள்ளாரா என்றால் சிவில் வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார், அது குறித்து தற்பொழுது ஞாபகமில்லை. பெட்ரோல் பங்க்கை தீ வைத்து கொளுத்த முயற்சி செய்கிறார்கள் என்று ஒரு புகார் கொடுத்துள்ளாரா என்றால் அது பாதுகாப்பு வேண்டி கொடுக்கப்பட்டது. அதற்கு புகார் மனு ரசீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ரசீது எண் எனக்கு தெரியவில்லை. சம்பவம் நடந்தது 29.10.2013 புகார் கொடுத்தது 15. 11.2013 என்பதால் முதல் தகவல் அறிக்கை காலம் 3 ல் கால தாமத்திற்கான நேரம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2013 ம் ஆண்டு நீதிமன்றமும், காவல் நிலையமும் ஒரே வளாகத்தில் தான் இயங்கியது என்றால் சரியல்ல. தற்பொழுது உள்ள இடத்தில் தான் இருந்தது. எப்பொழுது முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் 15.11.2013 தேதியிலேயே அனுப்பினேன். நான் 15.11.2013 ல் அனுப்பவில்லை என்றாலும் 20.11.2013 தேதியில் தான் அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் 20.11.2013 ல் முதல் தகவல் அறிக்கை அனுப்பியுள்ளதால் அ.சா.1 என்னிடம் 20.11.2013 தேதியில் தான் புகார் கொடுத்தார் என்றாலும் அந்த தேதியில் தான் நான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் இல்லாமல் மற்ற 9 நபர்கள் மீது சந்தேகம் உள்ளதாக தான் புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் முருகசாமி என்பவர் பெயரை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.